


**19. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு தொகை 5 லட்சம் ரூபாயிலிருந்து 25 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

2. காவிரி டெல்டா பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு இயக்கம், 5 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் கூறியுள்ளார்.

3. திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து சுற்றுலா மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

4. தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இன்று சென்னை வருகிறார்.

5. Galle டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இலங்கையை 165 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது.

இனி விரிவான செய்திகள்

**************

முதலமைச்சர் - 110

தமிழ்நாட்டில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு தொகை 5 லட்சம் ரூபாயிலிருந்து 25 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110 -ன் கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர், திருநங்கையருக்கான மருத்துவம்

மற்றும் அறுவை சிகிச்சை சேவைகள் கூடுதலாக சென்னை ஸ்டான்லி திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தர்மபுரி கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்றார்.

புற்றுநோய் தாக்கத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் 673 கோடியே 44 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

வாய்ஸ்

வடசென்னை மக்கள் பயன்பெறும் வகையில் பெரம்பூரில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 400 படுக்கை வசதிகளுடன் உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்,

தமிழ்நாட்டில் 7 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட்டு 660 BSC., செவிலியர் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்படும் என்றார்.

செவிலியர், மருத்தியல், துணை மருத்துவ பணியாளர்களை உருவாக்கும் வகையில் அரசு மருத்துவக்கல்லூரிகளில் 351 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆறாயிரத்து 98 கூடுதல் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்படும் என தெரிவித்தார்.

பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

இதன்மூலம் அரசுக்கு மாதத்திற்கு 30 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்றார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் மக்கள் பணியை தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு சார்பில் வாகனம் வழங்கப்படும்,

இதுதொடர்பான செலவினங்களுக்காக மாதந்தோறும் 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என கூறினார்.

அலுவலக பணிகளில் உதவியாளரை நியமித்துக்கொள்ள மாதந்தோறும் 25 ஆயிரம் ரூபாய் படியாக வழங்கப்படும் என்றும் கூறினார்.

**************

ஆனந்த் – கொள்கை விளக்க குறிப்பு

மேகதாதுவில் கர்நாடக அரசு அணைக்கட்ட உத்தேசித்திருப்பதை தடுத்து நிறுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை மானிய கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பை இன்று தாக்கல் செய்து பேசிய அமைச்சர், காவிரி டெல்டா பகுதியின் நீர்வளம், நிலவளம், வேளாண் உற்பத்தியை பெருக்கும் வகையில் சுற்றுச்சூழல் சீரமைப்பு இயக்கம் 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் என்றார்.

நீர் உள்கட்டமைப்பு திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் வகையில் ஆனைமலையாறு - நல்லாறு, எர்தலாவ் -- புலிக்கரை, இணைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும்,

நாமக்கல் மாவட்டத்தில் காவிரி திருமணிமுத்தாறு பகுதிகளில் தடுப்பணைகள் கதவணைகள் கட்டப்படும் என்றார்.

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கலை அதிகரிக்கவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும், வெள்ள தணிப்பு திட்டம் உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பருவமழை முன்னெச்சரிக்கையாக நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளை திறம்பட மேற்கொள்ள இதற்கான அதிகாரம் வட்டாச்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

களிமண் வண்டல் மண்ணை அகற்றுவதற்கான கால அவகாசம் 30 நாட்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் மட்டுமே பதிவு முறை செயல்படுத்தப்படும் என்று கூறிய அவர், வட்டார அளவில் தனித்தனியாக மேற்கொள்ளப்படும் பதிவு முறை நீக்கப்படுவதாக கூறினார்.

2 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட பணிகளுக்கு பதிவின்றி அனுமதி வழங்கப்படும் என்றும் அமைச்சர் திரு.ஆனந்த் குறிப்பிட்டார்.

**************

ராஜேஷ்குமார் கொள்கை விளக்க குறிப்பு

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.ராஜேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

பேரவையில் சுற்றுலாத்துறை மானியக்கோரிக்கை மீதான கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்துள்ள அவர், திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து சுற்றுலா மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கூறினார்.

மயிலாடுதுறை – தரங்கம்பாடி, திருப்பூர் - அமராவதி அணை பகுதி, கோவை - ஆழியாறு அணை, சேலம் -மேட்டூர் பகுதிகளில் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

**************

ராஜ்மோகன்

திருச்சி கலைக்காவிரி நுண்கலை கல்லூரியில் நடப்பு கல்வியாண்டில் 232 மாணாக்கர் பயின்று வருவதாக மாநில கலை பண்பாட்டு தொல்லியல் துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர், கலைத்துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் அரசு நிதி உதவி, சலுகை உள்ளிட்டவற்றை பெறும் வகையில் 86 ஆயிரத்து 50 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாநிலத்தின் தனித்துவமான கலை பண்பாட்டு பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்லும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்றார்.

**************

அஇஅதிமுக - வெளிநடப்பு

சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

மயிலாடுதுறையை சேர்ந்த மீனவர்கள் ஈரானில் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அஇஅதிமுக சட்டமன்ற குழு தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி, தாம்கொடுத்த கவன

ஈர்ப்பு தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது நாளை எடுத்துக்கொள்ளப்படும் என்று பேரவைத்தலைவர் திரு. J C D பிரபாகர் கூறியதை ஏற்க மறுத்து, அஇஅதிமுக உறுப்பினர்கள் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தலைமையில் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

**************

அமித்ஷா

தென்மாநில முதலமைச்சர்கள் இரண்டு நாள் மாநாடு சென்னை அருகே கோவளத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தலைமையில் நாளை தொடங்குகிறது.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்பதற்காக திரு.அமித்ஷா இன்றுமாலை சென்னை வர உள்ளார்.

இதனை அடுத்து கோவளம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தெலங்கானா முதலமைச்சர்கள் பங்கேற்கும் இம்மாநாட்டில் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பங்கீடு, எல்லை பிரச்சனைகள் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

**************

அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டின் வளர்ச்சி பாதையில் முதலீடுகள் மிக முக்கிய பங்காற்றுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் முதலீட்டு மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், ஆண்டொன்றுக்கு 130 பில்லியன் டாலர் முதலீடுகளை நம் நாடு மேற்கொள்வதாக எடுத்துரைத்தார்.

நமது பொருளாதார வளர்ச்சி உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும், 6 முதல் 8 சதவிகித வளர்ச்சியை நாம் சந்தித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

உள்ளடக்கிய வளர்ச்சி, உற்பத்திக்கு உயர் முன்னுரிமை, சமூக டிஜிட்டல் கட்டமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் நாட்டின்

வளர்ச்சிபாதை அமைந்துள்ளதாகவும் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

**************

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணனை இன்று சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை வலுப்படுத்துவதற்கான பேச்சு வார்த்தைகள் இதில் இடம்பெற்றதாக டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் அமைய உள்ள இந்தியாவின் புதிய தூதரக வளாகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் திரு.பாலகிருஷ்ணனுடன் இணைந்து தாம் பங்கேற்றதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்தியா - சிங்கப்பூர் நட்புறவின் அடையாளமாக இந்த வளாகம் திகழ்வதோடு, இந்திய வம்சாவளியினருக்கான சேவைகளை வலுப்படுத்தும் கருவியாகவும் இது இருக்கும் என்று டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

**************

நாகை

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு திருவிழா வரும் 29ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குவதை ஒட்டி முன்னேற்பாட்டு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்..

வெளிமாநில பக்தர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்கும் விடுதி உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் எச்சரித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

**************

ஆர்பாட்டம்

ஓய்வூதிய திருத்த சட்ட மசோதாவை திரும்ப பெற வேண்டும் உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தூத்துக்குடியில் மத்திய மாநில மற்றும் பொதுத்துறை நிறுவனத்தின் ஓய்வூதியர்கள் இன்று ஆர்பாட்டம் மேற்கொண்டனர்.

**************

இருவரி

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு வருவாய் கோட்ட அலுவலகத்தில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மைய செயல்பாடுகளை ஆட்சித்தலைவர் திருமதி சினேகா இன்று ஆய்வு செய்தார்.

தென்காசி மாவட்டத்தில் யானை தடுப்பு அகழி பணிக்கு ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்ற வழக்கில் சிவகிரி வனத்துறை அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் MBBS BDS மருத்துவ படிப்புகளுக்கான மாநில கலந்தாய்வின் முதல் சுற்றில் கல்லூரிகளை தேர்வு செய்வதற்கான கால அவகாசம் நாளைவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் இன்றும் நாளையும் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த் மோகன் எச்சரித்துள்ளார்.

கடல்சீற்றம் காரணமாக இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**************

வானிலை

வளிமண்டலத்தில் காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக செங்கல்பட்டு விழுப்புரம் கடலூர் தஞ்சை திருவாரூர் மயிலாடுதுறை நீலகிரி மாவட்டங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர் சென்னை திருவண்ணாமலை பெரம்பலூர் அரியலூர் புதுக்கோட்டை நாகை சிவகங்கை மதுரை திண்டுக்கல் தேனி சேலம் ஈரோடு நாமக்கல் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தமிழகம் மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பிலிருந்து 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை உயர்ந்துள்ளதாக இம்மையம் தெரிவித்துள்ளது.

**************

கிரிக்கெட்

Galle கிரிக்கெட் டெஸ்டில் இந்தியா இலங்கையை 165 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்றுள்ளது.

372 என்ற வெற்றி இலக்குடன் விளையாடிய இலங்கை 5ஆவது இறுதி நாளான இன்று, 4 விக்கெட் இழப்பிற்கு 84 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் தனது இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த நிலையில், 206 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஸ்கோர்

இந்தியா முதல் இன்னிங்ஸ் 462

இரண்டாவது இன்னிங்ஸ் 193

இலங்கை முதல் இன்னிங்ஸ் 284

இரு அணிகளுக்கிடையேயான இரண்டாவது இறுதி டெஸ்ட் போட்டி கொழும்பில் வரும் 23ஆம் தேதி தொடங்குகிறது.

**************

பேட்மிண்டன்

புதுதில்லியில் உலக பேட்மிண்டன் சேம்பியன் பட்ட போட்டியின் இரண்டாவது சுற்றில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் லக்சயா சென், ஆயுஷ் ஷெட்டியும்,

மகளிர் ஒற்றையர் பிரிவில் பி.வி.சிந்து, உன்னாட்டி ஹூடாவும் இன்று களமிறங்குகின்றனர்.

கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் டனிஷா கிறாஸ்டோ, துருவ் கபிலா இணை முன்னேறியது.

**************

ஹாக்கி

நெதர்லான்ஸ் ஆம்ஸ்டல்வீனில் நடைபெறும் உலக கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று மாலை ஆறரை மணிக்கு பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

Pool D பிரிவில் இடம்பெற்றுள்ள இந்தியா தற்போது 3 புள்ளிகளுடனும்,

பாகிஸ்தான் 1 புள்ளியுடனும் உள்ளன.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது